# திராவிடத்தால் வாழ்கிறோம்

939

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

திரைக்கதை வசனம்
## கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

25

# புதையல்; போதும் என்ற மனமே புதையல்!



திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

*1957-ஆம் ஆண்டு, கலைஞரின் கதை திரைக்கதை வசனத்தில் வெளியான திரைப்படம் 'புதையல்'. 'போதும் என்ற மனமும், உழைத்து வாழும் குணமும்தான் நல்வாழ்வுக்கான வழி' என்பதே 'புதையல்' படத்தின் மூலம் கலைஞர் அளித்த கருத்து. இயக்கம் கிருஷ்ணன் பஞ்சு, தயாரிப்பு கமால் பிரதர்ஸ்.*

*தமிழ்நாட்டில் வாழ வழியின்றி ஏழை எளிய, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் பிழைப்பிற்காக பல்வேறு நாடுகளுக்குக் கூலிகளாக குடிபெயர்ந்த சூழலில், இலங்கைத் தேயிலைத் தோட்டத்திற்குக் கூலிகளாகப் போய் சீரழிந்த ஒரு குடும்பத்தின் கண்ணீர்க் கதைதான் 'புதையல்'.*

### திரைப்படத்தின் கதை

*இலங்கைத் தேயிலைத் தோட்டத்தில் தேயிலையை எடைபோடும் வேலைசெய்யும் தொழிலாளி குமாரவடிவு (எம்.கே.ராதா) அவர் மனைவி வள்ளியம்மை அவர்களுக்கு இரண்டு குழந்தைகள், துரை மற்றும் தங்கம். வள்ளியம்மை மீது தேயிலைத் தோட்ட முதலாளியான வெள்ளைக்கார துரைக்கு ஆசை வந்துவிட, வள்ளி குடிசையில் தனியாக இருக்கும்போது குடிசைக்குள் போய் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபடுகிறான். தன்னைத் தற்காத்துக் கொள்ள அரிவாள்மனையை எடுக்கிறாள் வள்ளி. அப்போராட்டத்தில் வள்ளி கொல்லப்படுகிறாள். முதலாளி பயந்துபோய் ஓடிவிட, அங்கு வரும் குமாரவடிவு, மனைவி கொலை செய்யப்பட்டு ரத்த வெள்ளத்தில் கிடப்பதைப் பார்த்து ஆத்திரம் கொண்டு நிற்கிறான். அந்த நேரத்தில் போலீஸ் வர, மனைவியைக் கொலை செய்துவிட்டான் என அவரைக் கைதுசெய்து விடுகின்றனர். குழந்தைகள் இருவரும் அநாதைகளாகின்றனர்.*

*தீய எண்ணங்கொண்ட சாது (ஓ.ஏ.கே. தேவர்) ஒருவன் அநாதைகளாக நிற்கும் குழந்தைகளைத் தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்த நேரத்தில், ரவுடி அய்யப்பன் அவனது கூட்டாளிகளின் பேச்சை ஒட்டுக் கேட்டு புதையல் இருப்பதாக எண்ணி ஒரு கிணற்றுக்குள் குழந்தை தங்கத்தை இறக்க, அந்த நேரத்து களேபரத்தில், குழந்தை தங்கம் கிணற்றுக்குள் விழுந்து இறந்து போகிறாள்.*

*சாது தப்பித்து ஓடிவிட, துரை கிணற்றுக்குள் குதித்துத் தனது தங்கையின் உடலை தூக்கி வந்து அழுது புலம்பி விட்டு, அங்கேயே கடற்கரை மணலில் புதைத்து விடுகிறான்.*

*இந்தச் சம்பவங்களை எல்லாம், பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நாள் இரவு நேரத்தில் அதே கடற்கரை மணலில் அமர்ந்து (பின்னோக்குக் காட்சியாக-*



படங்கள் உதவி : ஞானம்

*Flash back) தனது காதலி பரிமளாவிடம் (பத்மினியிடம்) துரை (சிவாஜி) சொல்கிறான். 'அதோ அதுதான் தங்கம் புதைக்கப்பட்ட இடம்' என்று அவன் காட்டுகிறான். இந்தக் கடைசி சொற்றொடரை மட்டும் எதிர்பாராமல் கேட்டு விடும் மிராசுதாரர் வெள்ளியம்பலம் (டி.எஸ்.பாலையா) அதுநாள்வரை தான் தேடி அலையும் புதையலைப் பற்றித்தான் அவர்கள் பேசிக் கொண்டிருந்ததாக நினைத்து, தனது அடியாள்களுடன் அவர்களைத் துரத்துகிறான்.*

*தனது தாய் தகப்பனுக்குத் தெரியாமல் இரவில் திருட்டுத்தனமாக வந்து, தனது காதலன் போஸ்ட் மேன் துரையைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த பரிமளா பயந்துபோய் துரையுடன் ஓர் இடத்தில் ஒளிந்து கொள்கிறாள். துரை, தவற விட்ட காலணிகளை வைத்து வெள்ளியம்பலம் தப்பித்து ஓடிய காதலர்கள் யார் என்று கண்டுபிடிக்க முயற்சிக்கிறான். பரிமளாவை இரவு முழுவதும் காணாமல் தவித்த அவளது தந்தை தாண்டவன், போடும் கூச்சலைக் கேட்டு அங்கு வரும் வெள்ளியம்பலம் இரவு தப்பித்து ஓடிய பெண் பரிமளம்தான் என்பதை அறிந்து அவளது காதலன் யார் என ரகசியமாக விசாரிக்கிறான். அவள் துரையைக் காப்பாற்றுவதற்காக தன்னை ஒரு தலையாகக் காதலிப்பதுடன் தொடர்ந்து, காதல் கடிதங்களையும் எழுதி வரும் பட்டுக்கோட்டையைச் சேர்ந்த துக்காராம் (சந்திரபாபு) தான் தனது காதலன் என்று பொய் சொல்லி வெள்ளியம்பலத்தை ஏமாற்றுகிறாள். பணத்தாசை பிடித்த வெள்ளியம்பலம், துக்காராமை அழைத்து வந்து தனது வீட்டில் தங்கவைத்து, புதையலைப் பற்றி விசாரிக்கிறார். துக்காராம் ஒன்றும் தெரியாமல் விழிக்கிறான்.*



> **'போதும் என்ற மனமும், உழைத்து வாழும் குணமும்தான் நல்வாழ்வுக்கான வழி' என்பதே 'புதையல்' படத்தின் மூலம் கலைஞர் அளித்த கருத்து.**

### இலங்கையில் இருந்து தப்பி...

*அதேநேரத்தில், கடற்கரையில் சுற்றித் திரியும் மாயாண்டித் தாத்தாவை, ரவுடி அய்யப்பனிடமிருந்து காப்பாற்றும் துரை , மாயாண்டித் தாத்தா என்ற பெயரில் இருப்பது இலங்கைச் சிறையில் இருந்து தனது குழந்தைகளைப் பார்ப்பதற்காகத் தப்பி வந்து தலைமறைவாக வாழும் தன்னுடைய தந்தை குமாரவடிவுதான் என்பதை அறிந்துகொள்கிறான்.*

*இதற்கிடையே ஒரு பொய்யான கொலை வழக்கில் துரை கைது செய்யப்படுகையில், துக்காராம் அந்தக் கொலையை ஏற்றுக் கொள்வதால், துரை விடுவிக்கப்படுகிறான்.*

*அதேநேரம் சிறையில் இருந்து வெளியே வரும் துரையை வெள்ளியம்பலம் தனது அடியாட்கள் மூலம் தூக்கி வந்து, பாதாள அறையில் அடைத்து வைத்து, 'புதையல் எங்கே' எனக் கேட்டு சித்திரவதை செய்கிறான்.*

*மாயாண்டித் தாத்தாவும் பரிமளாவும் குடுகுடுப்பைக் காரர்களாக வேடமிட்டு வந்து, புதையல் இருக்கும் இடத்தைக் காட்டுவதாகக் கூறி வெள்ளியம்பலத்தை ஏமாற்றுகின்றனர். மாயாண்டித் தாத்தா வெள்ளியம்பலத்தைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்று ஆழக்குழி தோண்டச் செய்கிறார். அதே நேரம் குடுகுடுப்பைக்காரன் வேடமிட்ட பரிமளா, துரை இருக்குமிடத்தை அறிந்து, அவனை அங்கிருந்து மீட்கிறாள்.*

*வெள்ளியம்பலத்திற்குத் தெரியாமல் மாயாண்டித் தாத்தா தாயத்தை குழிக்குள் போட்டு விடுகிறார். அதை எடுக்கும் வெள்ளியம்பலத்திடம்,'சாமிக்கு முன்பு தாயத்தை வைத்துப் பூசை செய்து அதிகாலை மூன்று மணிக்கு தாயத்தைத் திறந்து பார் அதில் புதையல் கிடைப்பதற்கான வழி தெரியும்' என்று சொல்கிறார். அதன்படி வெள்ளியம்பலம் பூசை செய்கிறார். இடையே புதையல் கிடைக்க வேண்டுமெனில் ஒரு திருமண ஜோடியை காளிக்குப் பலி கொடுத்தால்தான் புதையல் கிடைக்கும் என வெள்ளியம்பலத்தின் மனைவி மேனகா எழுதி வைத்துவிட்டு, வெள்ளியம்பலத்தை எழுப்பித் தாயத்தைத் திறந்து பார்க்கச் சொல்கிறாள். இவையனைத்தையும் வீட்டுவேலைக்காரன் ராமன் ஒளிந்து நின்று பார்த்து விடுகிறான்.*

*தாயத்தைத் திறந்து காகிதத்தைப் படிக்கும் வெள்ளியம்பலத்திடம் துரைக்கும் பரிமளாவுக்கும் திருமணம் செய்து வைத்து அவர்களைப் பலிகொடுத்துவிடலாம் என்கிறாள் மேனகா. அவள் சொல்படி இருவருக்கும் திருமணத்தை நடத்தி வைத்து, வெள்ளியம்பலத்தின் அடியாட்கள் துரையையும் பரிமளாவையும் தூக்கி வருகின்றனர்.*

*அதற்கிடையே கொதித்தெழும் வெள்ளியம்பலம் தனது அடியாட்களுடன் தன் வீட்டுக்கு வந்து மேனகாவைக் கொலை செய்கிறான். அடுத்துத் துரை, பரிமளா, மாயாண்டி மூவரையும் கொலை செய்ய வேண்டும் என்று வெள்ளியம்பலம் புறப்படும்போது, காவல்துறை வந்து வெள்ளியம்பலத்தையும் அவனது கூட்டத்தினரையும் கைது செய்கிறது.*

*இறுதியாக வெள்ளியம்பலத்தைக் கைது செய்ய உதவியதால் குமார வடிவு காவல்துறையால் மன்னிக்கப்படுகிறார். மாயாண்டிதான் தனது தங்கையின் கணவர் குமாரவடிவு என்பதையும் அவரது மகன்தான் துரை என்ற உண்மையையும் அறிந்து பரிமளாவின் தந்தை தாண்டவன் சமாதான மடைந்து துரையையும் பரிமளாவையும் ஏற்றுக்கொள்வதுடன் படம் நிறைவடையும்.*

**...காட்சி விரியும்**

## "அதையெல்லாம் மறக்க முடியுமா?"

குடியரசுத் துணைத்தலைவர் என்பது ஒரு அரசியல் சார்பு பதவியாகவே மாற்றப்பட்டு வருகிறது. அரசமைப்புச் சட்டப் பதவி என்றாலும், இன்று இப்பதவி ஒரு சார்பு அரசியல் தன்மையைப் பெற்று விட்டது. ஜெகதீப் தன்கர் திடீர் பதவி விலகல் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இதற்கு முன்பு, தமிழ்நாட்டைச் சேர்ந்த டாக்டர் இராதாகிருஷ்ணன், ஆர்.வெங்கட்ராமன் குடியரசு துணைத் தலைவர்களாகப் பணியாற்றி, பின்பு குடியரசுத் தலைவர்களாகப் பணியாற்றியுள்ளனர். 1967-ஆம் ஆண்டு வரை காங்கிரஸ் கட்சியின் ஆட்சி, மாநிலங்களிலும் ஒன்றியத்திலும் இருந்ததால், அக்கட்சியின் ஆதரவாளர்களே குடியரசுத் தலைவராகவும் குடியரசு துணைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்கள். அவைத் தலைவர் என்ற முறையில், மாநிலங்கள் அவையின் கண்ணியத்தைக் காக்கக் கூடியவர்களாகவும் பலர் இருந்தனர்.

பொதுவாகக் குடியரசுத் தலைவர் வட மாநிலங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டால், குடியரசுத் துணைத் தலைவர் பதவி தென் மாநிலங்களுக்குக் கடந்த காலங்களில் வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில்தான் ஆந்திராவைச் சேர்ந்த திரு.வெங்கய்யா நாயுடுவுக்கு குடியரசு துணைத் தலைவர் பதவியை பா.ஜ.க. தலைமை வழங்கியது.

அடுத்தாக இந்த மரபைப் பின்பற்றாமல், வட மாநிலத்தைச் சேர்ந்த ஜெகதீப் தன்கருக்கே பா.ஜ.க. வாய்ப்பு அளித்தது. இரு பதவிகளும் இந்தி பேசுகிறவர்களுக்கே என்று முடிவெடுத்தது யார்?

ஏன், அப்போது ஒரு தமிழருக்கு வாய்ப்பு அளிக்கவில்லை? இப்போது மட்டும் ஏன் தமிழர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று கூக்குரல் எழுப்புகின்றனர்?

நடந்து முடிந்த ஒடிசா சட்டமன்றத் தேர்தலின்போது பிரதமர் நரேந்திர மோடியும் உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் தமிழர்கள் பற்றி என்ன பேசினார்கள்?

"பூரி ஜெகநாதரின் கருவூல சாவிகள் தமிழ்நாட்டுக்குப் போய்விட்டன" என்று பேசி, தமிழர்களுக்குத் திருட்டுப் பட்டம் கட்டினார் பிரதமர் நரேந்திரர்.

"ஜெகநாதரின் ரத யாத்திரையை நிறுத்த சதி நடந்துள்ளது" என்றார் உள்துறை அமைச்சர் அமித் ஷா.

'பிஜு ஜனதா தளம் கட்சியைச் சார்ந்த தமிழரான பாண்டியனை வானூர்தியில் தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைப்போம்' என்றார்கள். அதையெல்லாம் மறக்க முடியுமா?

'மானமும் அறிவும் மனிதர்களுக்கு அழகு' என்றார் தந்தை பெரியார். மானமுள்ள தமிழர்கள் இவற்றை எல்லாம் மறந்து விடமாட்டார்கள்.

-பேராசிரியர் மு.நாகநாதன்.

## ஃப்ளாஷ்பேக்



ஆ.சதாம்



### மூன்று தலைமுறையாக கழகப் பணி!

எனது தாத்தா எஸ்.ரத்தினம் அவர்கள், நெய்வேலி தொ.மு.ச மற்றும் நகர கழக வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர். நெருக்கடிநிலை காலத்தின்போது சிறைசென்ற கழக முன்னோடி. எனது தந்தை ஆர்.ஆபிரகாம், நெய்வேலி நகர முன்னாள் துணைச்செயலாளராகப் பணியாற்றியவர். மூன்றாவது தலைமுறையாக நான் கழகப் பணியில் தொடர்வதில் பெருமையாக உணர்கிறேன். இந்தப் படம், தேர்தல் சுற்றுப்பயணத்தின்போது, கடலூர் மாவட்டத்துக்கு வருகை தந்திருந்த அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சரும் இன்றைய கழகத் தலைவருமான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை எனது தந்தை நெய்வேலி விருந்தினர் மாளிகையில் சந்தித்து வாழ்த்துகள் பெற்றபோது எடுக்கப்பட்டது.

**– நெய்வேலி ஆ.சதாம், இளைஞர் அணி துணை அமைப்பாளர், கடலூர் மேற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### 1962 பொதுத்தேர்தல்!

1962-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், கழகம், சட்டமன்றத் தொகுதிகளில் 142 இடங்களில் போட்டியிட்டு 50 இடங்களைக் கைப்பற்றியது. நாடாளுமன்றத் தொகுதிகளில் 18 இடங்களில் போட்டியிட்டு 7 இடங்களைக் கைப்பற்றியது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.